## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**STC.No.1129/2023** **DATE:17.10.2024**

எ.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஹரிகரன் | Father's Name | : |
| District | : | Taluk | : |
| Village | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2024.

(புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்)

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் வசித்து வருகிறேன். நான் தறிக்கு வார்ப் போடும் வேலை செய்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரரிடம் இருந்து தான் வார்ப்பிற்கு நூல் வாங்கி வியாபாரம் செய்து வந்தேன். நூல் வியாபாரம் செய்வதற்கு முன்னர் கடந்த 2021 ம் வருடம் செக்யூரிட்டிக்காக என்னுடைய தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி கணக்கின் காசோலைகளை புகார்தாராரரிடம் தலா ரூ.1 லட்சம் தொகைக்கு மொத்தம் ரூ.4,00,000/-ற்கான 4 கசோலைகளை கொடுத்துள்ளேன்.

2) மேற்சொன்ன காசோலைகளில் தொகையை பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு நான் புகார்தாரரிடம் கொடுத்துள்ளேன். மேலும், எனது தொழில் நஷ்டமானதால் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய ரூ.4,00,000/-ம் தொகையில் ரூ.1,50,000/-ம் தொகையை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி கணக்கின் மூலமாகவும், ரூ.94,000/-ம் தொகையை கரூர் வைஸ்யா வங்கியின் மூலமாக புகார்தாரருக்கு Phone pay மூலமாகவும் மொத்தம்

ரூ.2,44,000/-ம் தொகையினை செலுத்தியும், ரூ.78,000/-ம் தொகையை ரொக்கமாகவும் மொத்தமாக ரூ.3,22,000/-ம் தொகையை 2021 ம் வருடம் அக்டோபர்/நவம்பர் மாதமே கொடுததுவிட்டேன்.

3) புகார்தாரரிடம் இருந்து நான் வாங்கிய நூலில் சேதம் இருந்ததால் மீதமுளள ரூ.78,000/-ம் தொகையை அதற்கென கழித்து கொண்டோம். ஆகையால், புகார்தாரருக்கு நான் கொடுக்க வேண்டிய பாக்கி தொகை எதுவும் இல்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் நேரம் கேட்டதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Witness (Sd)-Hariharan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.